**Previous Examination date – 08.04.2025.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 290 of 2011**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : முனியாண்டி** | **Father/Husband's Name : பாண்டியன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.10.2025.**

**A2, A10 died. A6 split up. A3, A4, A5, A7, A9, A12 present. A1, A8, A11 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் கடந்த 2024ம் வருடம் மேட்டுபாளையம் வன சரகத்தில் வனவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2010ம் வருடம் பழனி வனசரகம் ஆண்டிபட்டி பீட்டில் வனகாப்பாளராக பணிபுரிந்து வந்தபோது 15.10.2010ம் தேதி காலை 5.30 மணியளவில் பழனி வனசரக அலுவலர் திரு.தர்மராஜ் அவர்களுடைய வாகனத்தில் நானும், வனவர் சந்திரன் ஆகியோர்கள் ஏற்றிக் கொண்டு ரீச் கால்வாய் அருகே சென்றபோது வனசரகர் அவர்கள் என்னை ரீச் கால்வாய் அருகே நின்று கண்காணிக்கும் படி கூறினார். திரும்ப அவர்கள் எதிரிகளை அழைத்து வரும்போது அவர்களுடன் சேர்ந்து வனசரக அலுவலகத்திற்கு வந்தேன். எதிரிகள் அனைவரிடமும் வனசரக அலுவலர் வாக்குமூலம் பெற்றார். எதிரிகளிடம் இருந்து செம்புளிச்சான் கட்டை கைப்பற்றினார்கள். எத்தனை கிலோ கைப்பற்றினார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. ஆஜர் எதிரிகள் தான் கைது செய்து விசாரணை செய்த நபர்கள் ஆவார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,3,4,5,8,9,11,12 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

**2.** போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எதிரிகளை பிடித்து சென்றபோது நானும் காவல் நிலையத்திற்கு உடன் சென்றேன். வனசரக அலுவலர்களிடம் போலிசார் விசாரித்தார்கள், என்னிடம் கேட்கவில்லை. ரீச் கால்வாய்க்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை

சுமார் 6.00 மணி இருக்கும். எந்த போலிஸ் அதிகாரி எதிரிகளை விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் எதிரிகளை விசாரணை செய்து பொருட்களை கைப்பற்றினேனா என்றால் நான விசாரணை செய்யவில்லை. நான் பணியில் இருந்தேன் என்றும் ரோந்து பணிக்கு ரீச் கால்வாய்க்கு சென்றேன் என்றும் ஆவணங்களை தாலுகா காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. நாங்கள் சென்ற குழுவில் மூன்று பேர் இருந்தோம் என்றாலும் நான் ரீச் கால்வாய் பகுதியில் நின்று கொண்டேன் என்றாலும் மற்ற குழுவினர் ரீச் கால்வாய்க்கு உள்ளே சென்றார்கள் என்றாலும் சரிதான். எத்தனை குழுவினர் வந்தார்கள் என்றும் அந்த குழுக்களில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த எதிரியிடம் இருந்த என்ன பொருள் கைப்பற்றினார்கள் என்றும் யார் வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரிகளிடம் இருந்து பிடி பொருட்களை பிடித்தார்கள் என்று தெரியும், யாரிடம் இருந்து எந்த பொருள் பிடிப்பட்டது என்று தெரியாது, ஒப்புதல் வாக்குமூலம் யார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எதிரிகளிடம் இருந்து செம்புளிச்சான் கட்டைகளை பெற்றதாக சொல்லும் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.10.07 18:24:57 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 08.04.2025.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 290 of 2011**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : அய்யாசாமி** | **Father/Husband's Name : முருகன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.10.2025.**

**A2, A10 died. A6 split up. A3, A4, A5, A7, A9, A12 present. A1, A8, A11 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வால்பாறை வனசரகத்தில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் உடுமலைபேட்டை வனசரக அலுவலகத்தில் வனசரக அலுவலருக்கு ஓட்டுநர்/வனகாப்பாளராக பணிபுரிந்து வந்தபோது 15.10.2010ம் தேதி காலை 5.30 மணிக்கு நானும், சரவணன் வனசரக அலுவலர் மற்றும் கணேஷ் ராம் வனவர் ஆகியோர்கள் குழுவாக கரடிக்கூட்டத்தில் இருந்து ரீச் கால்வாய் அருகே சந்தன மரம் விற்பனை செய்வதாக வந்த தகவலின்பேரில் சம்பவயிடத்திற்கு சென்று வாகனத்தை ரீச் கால்வாய் அருகே நிறுத்திவிட்டு நான் வேனில் இருந்தபோது சரவணன் வனசரக அலுவலர் மற்றும் STF ஆய்வாளர் ஆனந்த் மற்றும் கணேஷ் ராம் வனவர் அவருடன் இருந்த காவலர்கள் ரீச் கால்வாய் அருகே உள்ள காட்டுபகுதிக்கு சென்றபோது ஆஜர் எதிரிகளை பிடித்து கொண்டு வந்தார்கள். ஆஜர் எதிரிகளிடம் இருந்து செம்புளிச்சான் கட்டை கைப்பற்றி கொண்டு வந்தார்கள். எதிரி மணி வனக்காப்பாளர் என்பவருடைய இருசக்கர வாகனம் XL மற்றும் TVS Sports இருசக்கர வாகனம் – 1 சம்பவயிடத்தில் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் எதிரிகளை எனது வண்டியிலும், மற்ற இரண்டு குழுக்களின் வாகனங்களிலும் ஏற்றிக் கொண்டு அமராவதி பீட் வனசரக அலுவலகத்திற்கு கொண்டு சென்று விசாரணை செய்தோம். சம்பவயிடத்தில் எட்டு எதிரிகளை கைது செய்தோம். இரண்டு எதிரிகள் தப்பி ஓடிவிட்டனர். பின்னர் பழனியில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு எதிராக

இருந்த காவல் நிலையத்திற்கு சென்று எதிரிகளை ஒப்படைத்து வன சரக அலுவலர் புகார் அளித்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1,3,4,5,8,9,11,12 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. நாங்கள் எத்தனை குழுக்களாக எங்கிருந்து வந்தோம் என்றால் நாங்கள் ஒரு குழுவாக உடுமலைபேட்டையில் இருந்து வந்தோம். STF குழு ஏற்கனவே வந்திருந்தார்கள், பழனி சரகத்தில் இருந்து ஒரு குழு வந்திருந்தார்கள். என் உடன் வந்த அதிகாரிகள் என்னை வாகனத்தில் இருக்க சொல்லிவிட்டு காட்டுக்குள் சென்றார்கள் என்றால் சரிதான். என்னுடன் வந்த அதிகாரிகள் எவ்வளவு தூரம் உள்ளே சென்றிருந்தார்கள் என்றால் சத்தம் கேட்கும் தூரத்தில் சென்றிருந்தார்கள். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எப்போது, எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பழனி வனசரக அலுவலகத்தில் வைத்து 16.10.2010 ல் விசாரித்தார்கள். எந்த எதிரியிடம் இருந்து வாகனத்தை பிடித்து கொண்டு வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக என்ன என்ன சொல்லி புகார் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடன் வந்த அதிகாரிகள் இந்த எதிரிகளை காட்டு பகுதியில் எந்த இடத்தில் வைத்து பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் எந்த எந்த எதிரிகளிடம் விசாரணை மேற்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் அது தெரியாது. உயர் அதிகாரிகள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஆய்வுக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பற்றி முழு விபரம் தெரியாமலும் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் நடந்த விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், பிடித்து கொண்டு வந்தார்கள்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.07 18:25:03 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 290 of 2011**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : செந்தில் குமார்** | **Father/Husband's Name : நாகலிங்கம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.10.2025.**

**Accused present(Split up Accused A6 in CC/290/2011)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் STFல் காவலராக பணிபுரிந்தபோது 15.10.2010ம் தேதி காலை 6 – 6.30 மணியளவில் ஆய்வாளர் ஆனந்த் அவர்களுடன் நானும், பிரதீப் என்ற காவலரும் சந்தன கட்டை கடத்துவதாக தகவல் கிடைத்ததன் பேரில் வன அதிகாரிகள் குழுவுடன் சேர்ந்து இரண்டு குழுக்களாக ரீச் வாய்க்கால் அருகில் தர்மராஜ் வனசரக அலுவலர் தலைமையில் ஒரு குழுவும், சரவணன் வன சரக அலுவலர் தலைமையில் ஒரு குழுவும், எங்கள் சிறப்பு படை ஒரு குழுவாகவும் பிரிந்து ரீச் வாய்க்கால் அருகில் பதுங்கி கண்காணித்தபோது அங்கு வந்த 10 நபர்கள் எங்களிடம் வந்து நாங்கள் சந்தன கட்டை வைத்திருக்கிறோமா என்று எங்களிடம் கேட்டபோது தர்மராஜ் அவர்கள் ஆமாம் இருக்கிறது என்பது போல் சொன்னவுடன் பணத்தை காட்ட சொன்னதால் தர்மராஜ் அவர்கள் பணத்தை காட்டினார். அப்போது எங்கள் தனிப்படை ஆய்வாளர் அந்த வந்த நபர்கள் சந்தேகத்திற்கிடமாக இருப்பதால் பிடிக்க சொன்னார். அப்போது எங்களை தள்ளிவிட்டு அவர்கள் ஓடினார்கள். அப்போது அங்கு எதிராக வந்த சரவணன் அவர்கள் தலைமையிலான குழு மடக்கி பிடித்தது. அவர்களை பிடித்த பிறகு அதில் ஒருவர் மணி என்பவர் என்றும், வனத்துறையில் வேலை செய்கிறேன் என்றும் சொன்னார். மேலும் அவர் எங்களிடம் நாங்கள் எதற்காக அங்கு வந்தோம் என்று கேட்டார். அப்போது மணி பணம் வைத்திருக்கிறீர்கள் அல்லவா அதை கொடுங்கள் கட்டையை தருகிறோம் என்று சொன்னார். அவர்களில் மணி TVS XL வண்டியிலும்

மற்றவர் Star sports வண்டியிலும் வந்தார்கள். அந்த இரண்டு வண்டிகளிலும் சுமார் 60 கிலோ எடையுள்ள செம்புளிச்சான் கட்டை இருந்தது. அதை சந்தன கட்டை என்று சொல்லி ஏமாற்றி விற்கும் போது தான் நாங்கள் பிடித்தோம். அப்போது சரவணன் அவர்கள் தன்னை உடுமலைபேட்டை வனசரக அலுவலர் என்று சொன்னார். வந்த எல்லோரும் வனத்துறையில் வேலை பார்ப்பதாக சொன்னார்கள். ஆனால் விசாரித்து பார்த்ததில் மணி என்பவர் மட்டும் தான் வனத்துறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் தான் ஊரில் இருந்து ஆட்களை சந்தன கட்டை என்று சொல்லி விற்கலாம் என்று அழைத்து வந்துள்ளார். விரட்டி பிடிக்கும்போது 10 பேரில் இரண்டு பேர் ஓடிவிட்டார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் தான் சம்பவயிடத்தில் இருந்தார்கள். இருசக்கர வாகனங்களின் பதிவெண் தற்போது ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1,3,4,5,8,9,11,12 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. என்னை எந்த தேதியில் எங்கு வைத்து யார் விசாரித்தார் என்றால் உதவி ஆய்வாளர் பிரேமானந்த் அவர்கள் என்னை 15.10.2010ம் தேதி வனசரக அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். நான் எனது ஆய்வாளருடன் என்ன வாகனத்தில் சென்றேன் என்றால் காவல் ஆய்வாளரின் TATA SUMO வாகனத்தில் சென்றோம். சரவணன் என்பவர் தலைமையில் எத்தனை வனதுறையினர் இருந்தார்கள் என்றால் மூன்று பேர் இருந்தார்கள். தர்மராஜ் என்பவர் தலைமையில் எத்தனை வனதுறையினர் இருந்தார்கள் என்றால் மூன்று பேர் இருந்தார்கள். மூன்று குழுக்களும் ஒரே இடத்தில் இருந்தோமா தனித்தனியாக இருந்தோமா என்றால் அங்கு சென்ற பிறகு தனித்தனியாக பிரிந்து இருந்தோம். ஒவ்வொரு குழுவிற்கும் இடையில் எவ்வளவு இடைவெளி இருந்தது என்றால் சுமார் கால் அல்லது அரை கி.மீ. இருக்கும். தர்மராஜ் என்பவரிடம் பணம் இருக்கிறதா என்று கேட்ட நபர் யார் என்றால் மணி என்று வனத்துறையில் வேலை செய்த நபர் கேட்டார். இவ்வாறு மணி பணம் கேட்டதாக எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தர்மராஜ் பணம் காட்டியதாக சொல்லியுள்ளதில் எவ்வளவு தொகை என்றும், எவ்வளவு ரூபாய் தாள்கள் என்றும் தெரியுமா என்றால் அது தெரியாது, பணம் இருந்தது. Star Sports வாகனம் யார் வைத்திருந்தார் என்று தெரியுமா என்றாலும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றாலும் அது தெரியவில்லை, சொல்லவில்லை. 60 கிலோ கட்டை என்று

சொல்லியதில் அதை யார் கைப்பற்றியது என்றாலும் அதன் எடையை எங்கு வைத்து பார்த்தார்கள் என்றாலும் எதிரிகள் தான் 60 கிலோ கட்டை இருக்கிறது என்று சொன்னார்கள். எதிரிகள் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு சந்தன கட்டை என்று சொல்லி யாரிடமும் விற்பனை செய்ததாகவோ, வேறு யாரும் வாங்கியதாகவோ எதிரிகள் சொன்னார்களா என்றாலும் நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றாலும் இல்லை. எதிரிகள் தள்ளிவிட்டதாக சொல்லியதில் எங்கள் குழுவில் யாருக்கும் காயம் இல்லை என்றால் சரிதான், தள்ளிவிட்டு ஓடியவர்களை பிடித்தோம். 8 பேரை பிடித்ததாக சொல்லியதில் அவர்களின் பெயர் விபரம் தெரியுமா என்றால் அது ஞாபகமில்லை, 8 பேரை பிடித்தோம். எந்தெந்த எதிரிகளை யார் பிடித்தார்கள் என்றால் சுமார் 250 மீட்டர் அளவில் நாங்களும் பிடித்தோம், எங்களுக்கு எதிராக வந்த சரவணன் குழுவினரும் பிடித்தார்கள். நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை பிடிக்கவில்லை என்றாலும் நாங்கள் அந்த இடத்திற்கு போகவில்லை என்றாலும் என் மேல் அதிகாரிகள் சொன்னதன் அடிப்படையில் சாட்சியாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.10.07 18:25:08 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 08.04.2025.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 290 of 2011**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : செந்தில் குமார்** | **Father/Husband's Name : நாகலிங்கம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.10.2025.**

**A2, A10 died. A6 split up. A3, A4, A5, A7, A9, A12 present. A1, A8, A11 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் STFல் காவலராக பணிபுரிந்தபோது 15.10.2010ம் தேதி காலை 6 – 6.30 மணியளவில் ஆய்வாளர் ஆனந்த் அவர்களுடன் நானும், பிரதீப் என்ற காவலரும் சந்தன கட்டை கடத்துவதாக தகவல் கிடைத்ததன் பேரில் வன அதிகாரிகள் குழுவுடன் சேர்ந்து இரண்டு குழுக்களாக ரீச் வாய்க்கால் அருகில் தர்மராஜ் வனசரக அலுவலர் தலைமையில் ஒரு குழுவும், சரவணன் வன சரக அலுவலர் தலைமையில் ஒரு குழுவும், எங்கள் சிறப்பு படை ஒரு குழுவாகவும் பிரிந்து ரீச் வாய்க்கால் அருகில் பதுங்கி கண்காணித்தபோது அங்கு வந்த 10 நபர்கள் எங்களிடம் வந்து நாங்கள் சந்தன கட்டை வைத்திருக்கிறோமா என்று எங்களிடம் கேட்டபோது தர்மராஜ் அவர்கள் ஆமாம் இருக்கிறது என்பது போல் சொன்னவுடன் பணத்தை காட்ட சொன்னதால் தர்மராஜ் அவர்கள் பணத்தை காட்டினார். அப்போது எங்கள் தனிப்படை ஆய்வாளர் அந்த வந்த நபர்கள் சந்தேகத்திற்கிடமாக இருப்பதால் பிடிக்க சொன்னார். அப்போது எங்களை தள்ளிவிட்டு அவர்கள் ஓடினார்கள். அப்போது அங்கு எதிராக வந்த சரவணன் அவர்கள் தலைமையிலான குழு மடக்கி பிடித்தது. அவர்களை பிடித்த பிறகு அதில் ஒருவர் மணி என்பவர் என்றும், வனத்துறையில் வேலை செய்கிறேன் என்றும் சொன்னார். மேலும் அவர் எங்களிடம் நாங்கள் எதற்காக அங்கு வந்தோம் என்று கேட்டார். அப்போது மணி பணம் வைத்திருக்கிறீர்கள் அல்லவா அதை கொடுங்கள்

கட்டையை தருகிறோம் என்று சொன்னார். அவர்களில் மணி TVS XL வண்டியிலும் மற்றவர் Star sports வண்டியிலும் வந்தார்கள். அந்த இரண்டு வண்டிகளிலும் சுமார் 60 கிலோ எடையுள்ள செம்புளிச்சான் கட்டை இருந்தது. அதை சந்தன கட்டை என்று சொல்லி ஏமாற்றி விற்கும் போது தான் நாங்கள் பிடித்தோம். அப்போது சரவணன் அவர்கள் தன்னை உடுமலைபேட்டை வனசரக அலுவலர் என்று சொன்னார். வந்த எல்லோரும் வனத்துறையில் வேலை பார்ப்பதாக சொன்னார்கள். ஆனால் விசாரித்து பார்த்ததில் மணி என்பவர் மட்டும் தான் வனத்துறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் தான் ஊரில் இருந்து ஆட்களை சந்தன கட்டை என்று சொல்லி விற்கலாம் என்று அழைத்து வந்துள்ளார். விரட்டி பிடிக்கும்போது 10 பேரில் இரண்டு பேர் ஓடிவிட்டார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் தான் சம்பவயிடத்தில் இருந்தார்கள். இருசக்கர வாகனங்களின் பதிவெண் தற்போது ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1,3,4,5,8,9,11,12 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. என்னை எந்த தேதியில் எங்கு வைத்து யார் விசாரித்தார் என்றால் உதவி ஆய்வாளர் பிரேமானந்த் அவர்கள் என்னை 15.10.2010ம் தேதி வனசரக அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். நான் எனது ஆய்வாளருடன் என்ன வாகனத்தில் சென்றேன் என்றால் காவல் ஆய்வாளரின் TATA SUMO வாகனத்தில் சென்றோம். சரவணன் என்பவர் தலைமையில் எத்தனை வனதுறையினர் இருந்தார்கள் என்றால் மூன்று பேர் இருந்தார்கள். தர்மராஜ் என்பவர் தலைமையில் எத்தனை வனதுறையினர் இருந்தார்கள் என்றால் மூன்று பேர் இருந்தார்கள். மூன்று குழுக்களும் ஒரே இடத்தில் இருந்தோமா தனித்தனியாக இருந்தோமா என்றால் அங்கு சென்ற பிறகு தனித்தனியாக பிரிந்து இருந்தோம். ஒவ்வொரு குழுவிற்கும் இடையில் எவ்வளவு இடைவெளி இருந்தது என்றால் சுமார் கால் அல்லது அரை கி.மீ. இருக்கும். தர்மராஜ் என்பவரிடம் பணம் இருக்கிறதா என்று கேட்ட நபர் யார் என்றால் மணி என்று வனத்துறையில் வேலை செய்த நபர் கேட்டார். இவ்வாறு மணி பணம் கேட்டதாக எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தர்மராஜ் பணம் காட்டியதாக சொல்லியுள்ளதில் எவ்வளவு தொகை என்றும், எவ்வளவு ரூபாய் தாள்கள் என்றும் தெரியுமா என்றால் அது தெரியாது, பணம் இருந்தது. Star Sports வாகனம் யார் வைத்திருந்தார் என்று தெரியுமா என்றாலும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா

என்றாலும் அது தெரியவில்லை, சொல்லவில்லை. 60 கிலோ கட்டை என்று சொல்லியதில் அதை யார் கைப்பற்றியது என்றாலும் அதன் எடையை எங்கு வைத்து பார்த்தார்கள் என்றாலும் எதிரிகள் தான் 60 கிலோ கட்டை இருக்கிறது என்று சொன்னார்கள். எதிரிகள் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு சந்தன கட்டை என்று சொல்லி யாரிடமும் விற்பனை செய்ததாகவோ, வேறு யாரும் வாங்கியதாகவோ எதிரிகள் சொன்னார்களா என்றாலும் நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றாலும் இல்லை. எதிரிகள் தள்ளிவிட்டதாக சொல்லியதில் எங்கள் குழுவில் யாருக்கும் காயம் இல்லை என்றால் சரிதான், தள்ளிவிட்டு ஓடியவர்களை பிடித்தோம். 8 பேரை பிடித்ததாக சொல்லியதில் அவர்களின் பெயர் விபரம் தெரியுமா என்றால் அது ஞாபகமில்லை, 8 பேரை பிடித்தோம். எந்தெந்த எதிரிகளை யார் பிடித்தார்கள் என்றால் சுமார் 250 மீட்டர் அளவில் நாங்களும் பிடித்தோம், எங்களுக்கு எதிராக வந்த சரவணன் குழுவினரும் பிடித்தார்கள். நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை பிடிக்கவில்லை என்றாலும் நாங்கள் அந்த இடத்திற்கு போகவில்லை என்றாலும் என் மேல் அதிகாரிகள் சொன்னதன் அடிப்படையில் சாட்சியாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.07 18:25:14 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.